RBI / 2004-05 / 268

RPCD.CO.RF.BC.55/07.38.01/2004-05 நவம்பர் 1, 2004

மாநில, மாவட்ட மத்தியக்
கூட்டுறவு வங்கிகள்.

அன்புடையிர்,

2004 – 05 ஆண்டுக் கொள்கை அறிவிப்பின் இடைக் காலச் சிராய்வு –
உள்நாட்டு / குடியோருப்போர் அல்லாதவர்களின் சாதாரணக்
<u>கணக்கு வைப்பு தொகைகளின் கால அளவைக் குறைத்தல்</u>

2001 ஏப்ரல் 19 சுற்றறிக்கை RPCD.No.RF.DIR.BC.77/07.38.01/2000-01 பாரா 1 (i) ஜப் பார்க்கவும். 7 நாட்களுக்குப் குறையாத கால அளவு உள்ள, ரூ. 15 லட்சமும் அதற்கு மேற்பட்ட தொகையை வைப்புத்தொகையாக வங்கிகள் ஏற்றுக் கொள்ளலாம். ரூ. 15 லட்சத்திற்குக் குறைவான தொகைக்கு குறைநத கால அளவு 15 நாட்களாக இருக்கவேண்டும்.

2. 2004-05 ஆண்டுக் கொள்கையின் இடைக்கால சிராய்வு பாரா 73 – 74 ஜப் பார்க்கவும். மேற்கூறிய வழிகாட்டுதல்கள் மறு ஆய்வு செய்யப்பட்டு , வைப்புகளின் கால அளவில் ஒற்றுமையான நிலைபாடு ஏடுக்கும் வகையில், வங்கிகள் தங்கள் விருப்பம் போல ரூ. 15 லட்சத்திற்கும் குறைவான தொகையையும் , 15 நாட்களிலிருந்து 7 நாட்களுக்கான கால அள்விலும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் இப்போது இல்லத போல 15 லட்சமும் அதற்கு மேலும் உள்ள தொகைக்கான வைப்புகளின் வட்டிவிகிதம் வேறு வேறு விதமாகவும் வழங்கலாம். மாற்றப்பட்ட இந் த அறிவிப்பு 2004 நவம்பர் 1 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் .

3. சம்பந் தப்பட்ட ரிசர்வ் வங்கிக் கிளைக்கு, இக்கடிதம் கிடைத்தமைக்கு ஓப்புதல் அளிக்கவும்.

நம்பிக்கையுள்ள

G. சீனிவாசன்

தலைமைப் பொது மேலாளர்

**வட்டி விகித கொள்கை**

<u>(c) உள் நாட்டு வைப்புகளின் கால அளவைக் குறைத்தல்</u>

73. தற்சமயம் உள்நாட்டு வைப்புகளுக்கு முதிர்வு அடையும் காலம் தொகை ரூ. 15 லட்சமும் அதற்கு மேலும் இருந்தால் 7 நாட்களாகவவும் ரூ. 15 லட்சத்திற்குள் இருந் தால் 15 நாளாகவும் இருந்து வருகிறது. வைப்புகளின் கால அளவில் ஒற்றுமையான நிலையை உருவாக்கிட-

வங்கிகள் தங்கள் விருப்பம் போல், ரூ. 15 லட்சத்திற்கும் குறைவான தொகை வைப்புகளுக்கும் குறைந்த கால அளவை 15 நாட்களிலுருந்து 7 நாட்களாகக் குரைத்துக் கொள்ளலாம்.

74. தற்போது அமலில் உள்ளது போல ரூ. 15 லட்சமும் அதற்கு மேலுமான தொகை வைப்புகளுக்கு வேறு வேறு விதமான வட்டி விகிதங்களை வங்கிகள் தொடர்ந்து வழங்கலாம்.